உ
சிவமயம்

REGISTERED AS A NEWS PAPER IN CEYLON
P. M. G. No. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத் ருசூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞூ தை மீ கஎ உ (1948 ஜனவரி 30 வெள்ளிக்கிழமை) [இல அக

## கடவுள் உண்மை

சா. முனிசாமிப்பிள்ளை

(முற்றொடர்)

சர்வேசன் அவரவர் மனநிலைக் கேற்றவாறு குணுதண வடிவங்கள் உடையவனுகத் தோன்றுகிறுன். பாமரர்களால் செய்தற்கு இயலாதெனக் கருதப்படும் அரிய பெரிய செயல்கள் எத்தனையோ அறிவுடையோரால் செய்யப்படுகின்றன. கடவுள், ஒரு வடிவத்தையுடையவராகவும், நேரில் நமக்குக் காணப்படுபவராயும் இருப்பாராகில், அவர் நம் மெல்லார்க்கும் ஒரே வடிவத்தையுடையவராய்த் தோன்றுவர். எல்லையில்லாத பரம்பொருளை எல்லைக்குட்படுத்த எங்ஙனம் கூடும்? கடவுள் தோற்றம் மனிதனுடைய மனச் சிருஷ்டிக்கு ஏற்றவாறேயாகும்.

எல்லாம் வல்ல இறைவர், இன்ன தன்மையுடையவர் இன்ன வடிவத்தையுடையவர் என்று கூற ஒருவராலும் இயலாது. அங்ஙனம் கூற ஒருவன் முயற்சிப்பானுகில், அம்முயற்சி, ஆகாயத்தின்கண் தோன்றும் நட்சத்திரங்களை எண்ண முயல்வதை யொக்கும். கல்விக்கடலாகிய கம்பநாட்டாழ்வாரும் இராமபிரானுடைய கல்யாண குணங்களைச் சொல்லவந்தபோது,

"நாழி நவைதீருலகெலா மாக
நளினத்து நீதந்த
நான்முகனுர்தாமே
ஊழி பலபலவு
நின்றளந்தாலொன்று
மூலவாப் பெருங்குணத்த
வுத்தமனே மேனுள்
தாழி தரையாகத்
தண்டயிர் நீராகத்
தடவரையே மத்தாகத்
தாமரைக்கைந் நோவ
ஆழி கடைந்தமுத
மெங்களுக்கே யீந்தா
யவுணர்கடா நின்னடிமை
யல்லாமை யுண்டோ?

என்று கூறியருளினர்.

இதனுல் பிரமன். உலகங்களாகிய படியைக் கொண்டு அளப்பதாகக் கொள்ளப்படாது: ஈசன் குணம் வரம்பு கடந்தது என்பதை வற்புறுத்துவதாகக் கொள்ளவேண்டும். மற்றும் இத்தகைய எண்ணிறந்த குணங்களுடையவர் கடவுள் என்பதையும் அறியவேண்டும்.

"ஆஸ்திகர்கள் கடவுள் உண்டென்று சாதிக்க, நாஸ்திகர்கள் என்னும் ஒரு சிறு பிரிவினர், கடவுள் இல்லை என்று ஏன் சாதிக்கவேண்டும்?" என்று பலர் ஐயப்படலாம். ஒரு பொருளின் நிலையை அறியக் கூடாதெனின் அப்பொருள் உண்டோ? இல்லையோ? என்று சந்தேகிப்பது இயல்பு. காற்றுச் சலியாத காலத்தில் பலர் "காற்றேயில்லை" என்று சொல்லக் கேட்கிறோம். உண்மையில் அவர்களைச் சுற்றிலும் காற்று வியாபித்திருக்கிறது. அவர்கள் இல்லை என்பது காற்றுச் சலிக்கவில்லை என்னும் பொருளதே. அவ்வாறு 'காற்று இல்லை என்னும் சொல்லுக்குப் பொருள் கொள்ளாமல் அவர்களோடு 'காற்றே இல்லை என்று சொன்னுர்கள்' என வாதிக்க முயல்வது பயனற்றதாகும். காற்று அசையப்படாதபோது 'காற்றேயில்லை என்று சொல்லும் தன்மையைப் போன்றதே நாஸ்திகர்களுடைய கொள்கையும்.

'கடவுள் இல்லை' என்று நிலைநாட்ட முயன்ற மேல்நாட்டுத் தத்துவ சாஸ்திரங்களாகிய டார்வின் (Darvin) ஸ்பென்சர் (Spencer) (Hekhal) முதலியோர்களும், 'உயிர்கள் உண்டாவது ரஸாயனச் செயலால்' (Chemical abtion) என்று தீர்மானித்தனர்; பின்னர் எல்லாப் பொருள்களிலுமுள்ள இரண்டு சலனங்களை (Molar and molecular motion) விவரிக்கும்போது, "அவ்வாறு அவை சலிக்கச் சக்தி எங்கிருந்து உண்டாயிற்று" என்று சொல்ல முடியாமல் அவர்கள் திகைத்தனர்; நன்கு விழித்தனர். இவர்கள் பாமரர் கருதுகின்றவாறு கடவுள் வடிவமுடையவர் அல்லர் என்பதைத் தெரிவிக்கின்றுர்கள். இவர்களுடையகருத்து கடவுள் ஒரு சக்தி என்பதேயாம். இங்கு 'சக்தி முன்னு? சிவன் முன்னு?' என்னும் பாமரர் கேள்விகளும் கவனித்தற்குரியன. மேல்நாட்டான் ஒருவன் கடவுளைக் குறித்துக் கூறும்போது, கடவுள் ஒரு பெரிய வட்டம்; அவ்வட்டத்தின் மத்தி எங்கும் காணப்படுகிறது. ஆயினும் அந்த வட்டத்தின் சுற்றுக்கோடு எங்கிருக்கின்றதோ தெரிகின்றிலது' (God is a circle whose centre is everywhere and whose centre is nowhere என்று சொல்லிப் போயினன். கணித சாஸ்திரிகள் அளவு கடந்ததை எல்லையற்றது (Infimite) என்று சுருங்கச் சொல்லி மயக்குவதைப்போலிருக்கிறது. இவனுடைய கருத்தும் அண்டபிண்ட சராசரங்களனைத்தையும் தன் வயிற்றிற்குள் அடக்கி, அவற்றிற்கு அப்பாலாயும் இப்பாலாயும் எல்லையற்ற வன்மையோடிருக்கும் ஒரு முழுமுதற் பொருளின் உண்மை நிலையை உள்ளவாறு எடுத்துக் கூறுபவர் எத்தகைய அறிவு படைத்த பெரியாராயிருத்தல்வேண்டும்?

இதுவரையில் சொல்லியவற்றிலிருந்து கடவுள் ஒருவர் உண்டென்றும் அவர் நிலைமை இயற்கைப் பொருள்களின் வாயிலாகவும் அறியக்கிடக்கின்றதென்றும், அவர் வாசாமகோசரர் என்றும், எங்கும் நிறைந்தவர் என்றும், அறிவின் முதிர்ச்சியில்லாதவர்கள் அவரைப் பல்வேறு வடிவங்களோடு இருக்கின்றவர் என்று சொல்லி வணங்குகின்றுர்கள் என்றும், நாஸ்திகர்களும் ஈசன் ஒருவன் உண்டென்பதை மறக்க வல்லவர்கள் அல்லர் என்றும், அவர்கள் கடவுளை யறியும் வழி வேறு என்றும், பரமன் அவரவர் அறிவுக்கு ஏற்றவாறு வடிவம் தன்மை வன்மை முதலியன வாய்ந்திருப்பான் என்றும் அறியக்கிடக்கின்றன.

இவ்வுண்மைக்கு [illegible]

## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

சாந்தமாகவெண் ணீறுபூசிவெண் பற்றலைகலனு
வேய்ந்தவெண்பிறைக் கண்ணி தன்னையோர் பாகம்வைத்துகந்தீர்
மோந்தையோடு முழக்கருமுருகன் பூண்டிமாநகர்வாய்
ஏந்துபூண்முலை மங்கைதன்னெடும் எத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

## மகோதயம்

( திரு. சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை )

மூர்த்திதலந் தீர்த்தமுறையாற்
றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே.

அமாவாசை, பௌர்ணிமை, மாசப்பிறப்பு, கிரகணம், சிவராத்திரி, மாசிமகம் முதலிய புண்ணிய காலங்களிலே புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி இறைவனைவணங்குதல் இந்து சமுதாயத்திலுள்ள பழைய வழக்கங்களுள் ஒன்றும். இது தொன்றுதொட்டு அனுசரிக்கப்பட்டு வருகின்றது கண்கூடு.

மகோதயமாவது தைமாசத்திலே திங்கட்கிழமையும் அமாவாசையும் திருவோணநட்சத்திரமும் விதிபாத யோகமும் கூடிய காலம். இப்புண்ணியகாலம் 25 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்வதாகக் கூறப்படுவதால் இது மகாமகத்தை விட மேலானதாகக் கருதப்படுகின்றது. மகோதயம் என்னும் சொல் மகா+உதயம் என்று பிரிக்கப்படும், விசேஷ சூரிய உதயகாலம் என்பது பொருள். இவ்விசேஷ புண்ணிய காலத்தில் சூரியோதய வேளையில் புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கிக் கடவுளை வழிபடவேண்டியது எமது கடமையாகும். இந்நன்னுள் இவ்வருடம் 9-2-48ல் வருகின்றது. அப்புண்ணிய தினத்திலே சேது ஸ்நானமே முக்கியமாகச் செய்யவேண்டியது. சேது ஸ்நானத்திற்குரிய தலங்களாவன:—

(1) ஆதிசேது எனப்படும் கோடிக்கரை (வேதாரணியத்திற்குச் சமீபம்)

(2) இராமசேது எனப்படும் தனுஷ்கோடி

(3) அர்த்தசேது எனப்படும் மகாபலிபுரம், (செங்கற்பட்டுக்குச் சமீபம்)

இவ்விடங்களில் சமுத்திர ஸ்நானமே விசேஷமானது. "தவமுந் தவமுடையார்க்காகும்" என்றபடி இப்புண்ணியதீர்த்தஸ்நானம எல்லோர்க்கும் சித்திக்காது. இப்போது உலகமுள்ள நிலையில் அன்பர்களெல்லாம் தத்தம் வசதிக்குத் தக்கபடி இப்புனித காலத்தை அவமேபோக்காது ஆலய தரிசனம், செபம், தோத்திரம் முதலியவற்றைச் சிறப்பாகச் செய்துய்வார்களாக.

கங்கையாடி லென்
காவிரியாடிலென்
கொங்கு தண்
குமரித்துறையாடி லென்
ஒங்குமா கடலோத
நீராடி லென்
எங்கு மீசனெனுதவர்க்கில்லையே

கோடி தீர்த்தங் கலந்து
குளித்தவை
ஆடினு மரனுக்
கன்பில்லையேல்
ஓடு நீரினை
ஓட்டைக் குடத்தட்டி
முடிவைத்திட்ட
மூர்க்கனே டொக்குமே.

திருச்சிற்றம்பலம்.

திருவருள் விலாசம பரசிவ வணக்கத்தில்,

"அங்கிங் கெனுதபடி யெங்கும்
ப்ரகாசமா யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள்
வெளிக்குளே யகிலாண்டகோடி
யெல்லாம்
தங்கும்படிக் கிச்சைவைத் துயிர்க்குயி
ராய்த்தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாம னின்றதெது சமயகோடிக
ளெலாந்தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு
நின்றதெது வெங்கணும் பெருவழக்
காய்
யாதினும்வல்லவொரு சித்தாகியின்பமா
யென்றைக்கு முள்ளதெது மேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுளதெது
வது கருத்திற்கிசைந்த ததுவே
கண்டனவெலாமோன வுருவெளியதாக
வுங் கருதியஞ்சலி செய்குவாம்,"

என்று கூறியிருப்பதை ஒப்பிட்டு [illegible]ராய்ந்து அறிவீராக.

### மன்னுர்ப்பகுதி அரசினர் ஆசிரியர் சங்கம்

நிகழும் 1948-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24-ந் திகதி சனிவாரத்தன்று காலை 9 மணியளவில் ஷை சங்கம், எருக்கலம்பிட்டி அரசினர் மத்திய கலாசாலை அதிபர், திரு. க. நவரத்தினராசா B A. அவர்கள் தலைமையின்கீழ் மன்னுர் அரசினர் பாடசாலையில் ஆரம்பமாயது.

அத்தருணம் சங்கவுறுப்பினர் தெரிவு நிகழ்ந்த பின்னர், பிரமாணங்கள் ஆக்கப்பெற்றன. ஈற்றில் காரியதரிசி திரு. செ.சிவலிங்கம் (தமிழ்ப் பண்டிதர், அரசினர் மத்திய கலாசாலை எருக்கலம்பிட்டி) அவர்களின் நன்றிபாராட்டலுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஸ்ரீ
தை மீ கஎ உ வெள்ளிக்கிழமை

## மகோதய புண்ணிய காலம்

தை மாசத்திலே திங்கட்கிழமையும், அமாவாசைத் திதியும், திருவோண நட்சத்திரமும், விதிபாத யோகமும் சூரியோதய காலத்தில் ஒருங்கு வியாபகமாயிருப்பின் அதுவே மகோதய புண்ணியகாலமெனப்படும்; பூரணமான மகோதயம் இருபத்துநாலு இருபத்தைந்து வருடங்கட்கொரு முறையே பெரும்பாலும் நிகழுமெனச் சோதிடகணித நூல்கள் கூறும். இம்மகோதய புண்ணிய காலத்திலே தீர்த்த ஸ்நானஞ் செய்வோரடையும் பலனைச் சேதுபுராணம் முதலிய நூல்கள் கூறியுள்ளன; மகோதய புண்ணிய காலத்திலே சமுத்திர சங்கம தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ் செய்தலால், இம்மை மறுமை நன்மையுண்டென்பது எங்கள பெரியோர் கொள்கை; மேலும் பல வருடங்கட்கொருமுறை நிகழ்வனவாகிய அர்த்தோதய மகோதய புண்ணிய காலங்களிற் சமுத்திர தீர்த்தஞ் செய்தலாகிய பேறு எல்லார்க்கும் நிச்சயமாகக் கிடைக்குமென நாம் காத்திருக்க வொண்ணாதாதலினல், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளல்வேண்டுமென்ற பிரகாரம், சைவமக்களனைவரும் இந்தத் தை மாசம் 27 உ (9-2-48) திங்கட்கிழமை சூரியோதயப்போது நிகழும் மகோதய புண்ணிய காலத்தைத் தவறவிட வொண்ணாது. சமுத்திர சங்கம தீர்த்தமேனும், சமுத்திர தீர்த்தமேனுஞ் செய்தல் வேண்டும்.

இப்புண்ணிய காலத்திலே ஸ்நானஞ் செய்தற்கு விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்குமிடங்கள் வேதாரணியத்திற்கு அணித்தாகவுள்ள கோடிக்கரை, இராமசேது எனப்படும் தநுஷ்கோடி, அர்த்தசேது எனப்படும் மகாபலிபுரமென்னு மிவைகளாம். எங்கள் யாழ்ப்பாணத்திலும் சமுத்திர சங்கம தீர்த்தங்களாகிய கீரிமலை, மூளாயிலுள்ள திருவடிநிலை, கந்தவனத்திற்குச் சமீபமாகவுள்ள ஊருணி, வண்ணார்பண்ணை மேற்கிலுள்ள வில்லூன்றி முதலியவுண்டு; இவை மாத்திரமல்லாமல் அர்த்தோதய மகோதய புண்ணிய காலங்களிற் சமுத்திரக்கரை முழுவதும் புண்ணிய தீர்த்தமாகவே மதிக்கப்படும்.

இனி, இப்புண்ணிய காலத்திலே மேற்சொல்லப்பட்ட தீர்த்தங்களுக்கு அணித்தான கோயில்களிலுள்ள உற்சவ மூர்த்திகளையும், இத்தீர்த்தங்கட்கு இரண்டு மூன்று நான்கு மைல் தூரத்திற் கோயில்கொண்டருளிய மூர்த்திகளையும் அந்தக் கோயிலதிகாரிகள், குருக்கண்மார், அவ்வத்தலவாசிகளாகிய எல்லோரும் புலரிக்காலத்துக்கு முந்தியே எழுந்தருளச்செய்து, அந்த அந்தத் தீர்த்தக் கரைகளில். முந்தியே அது அதற்கென இடப்பட்ட பந்தரின் கீழும், மண்டபங்களிலும் கொடுவந்து வைத்துப் பூசை செய்து தீர்த்தம் வழங்கியவுடன், அன்பர்கள் தீர்த்த ஸ்நானஞ் செய்தல் வழக்கம்; இவற்றோடு கடற்கரைக்குச் சமீபமாகவும் சில மைல் தூரத்திலும் இருக்கும் கோயில்களிலுள்ள மூர்த்திகளைச் சமீபத்திலுள்ள கடற்கரையோரத்திற்கு எழுந்தருளச் செய்து தீர்த்தம் வழங்குவது அநுபவத்திற் கண்டதாகும்; ஆனால் காலஞ் செல்லச்செல்ல இப்படியான கருமங்கள், கோயிலதிகாரிகள் குருக்கண்மாண்மார், ஊரவர்களென்னு மிவர்களிடத்து வந்து புகுந்த அலட்சியம் தொன்மை மறத்தல் பத்தியின்மை முதலிய காரணங்களினற் குன்றத் தலைப்பட்டுக்கொண்டன; சைவாபிமானிகளாயுள்ளோர் இப்படியான பழைய தூய கொள்கைகளைத் தொன்மைபோல் ஓங்கச்செய்தல் வேண்டும்; மேலும், குறித்த மகோதய புண்ணிய தினம் திங்கட்கிழமையும் அமாவாசையுங் கூடிய தினமாதலால் யோக சிவராத்திரியுமாகும்; இவைகளையெல்லாம் உத்தேசித்து, ஆங்காங்குள்ள கோயிலதிகாரிகளும் குருக்கண்மாரும், ஊரவர்களும் விரைவில் நிகழவிருப்பதாகிய மகோதய புண்ணிய காலத்தில் மூர்த்திகளைப் புனிதமான முறையிற் சமுத்திர தீர்த்தத்திற்கு எழுந்தருளச்செய்து, தாங்களும் தீர்த்தத்தில் மூழ்கி உய்தியடைவார்களாக.

### விவாகம்

**மயில்வாகனம்—விசாலாட்சி**

நிகழும் தைமீ 10உ (23-1-48) வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்குமேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், வண்ணார்பண்ணை நீராவியடி திரு ஆ. சண்முகமவர்களின் சிரேட்ட புத்திரன், திரு. மயில்வாகனத்திற்கும், வண்ணார்பண்ணை திரு நா. குமாரசாமியவர்களின் புதல்வி திருவளர் செல்வி விசாலாட்சி யம்மாளுக்கும், யாழ்ப்பாணம் காங்கேயன் துறைத்தெரு 431-ம் இலக்கத்துள்ள மணமகளில்லத்தில் விவாகம் விதிப்படி சிறப்புற நிறைவேறியது.

தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும்பெற்று இன்புற்று இனிதுவாழும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

### பெற்ரோல் கட்டுப்பாடு

யுத்தம் தொடங்கிய காலம் முதல் இந்த இந்த இலங்கையில் அநுட்டானத்திலிருந்த பெற்ரோல் விநியோகக் கட்டுப்பாடு வருகிற பிப்ரவரி மாதத் திட்டன் தவிர்க்கப்படும். சுதந்திரக் கொண்டாட்டத்தின்போது மக்கள் போய்வருவதற்கு வசதியாக இது இருக்குமாம். ஆனால் மண்ணெண்ணெய்க் கட்டுப்பாடு நீங்குவதுபற்றி எவ்விதமான முடிவும் இல்லை.

### யாழ்ப்பாணம் சைவமகளிர் கல்லூரி

நிகழும் ஜனவரி மாதம் 25 ந் தேதிக்குப்பின இக்கல்லூரியிற் சேர்ந்து படிக்க வரும் புதிய மாணவிகளை இந்த ஆண்டில் ஏற்றுக்கொள்வதற்கு இடமில்லையென்பதை இப்பத்திரிகை மூலமாகத் தெரிவிக்கும்வண்ணம் [illegible] ஆசிரியை கேட்டு[illegible]

# பணிந்தார்!

## சிங்கக் கொடியைத் திணிக்கவில்லை

சென்ற செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சபை கூடியபோது பிரதமர் மிஸ்ரர் டி. எஸ். சேனநாயக்கர் தேசியக்கொடி விஷயமாக ஓர் அறிக்கை சமர்ப்பித்தார். இலங்கைக்கு ஏற்றதான ஓர் தேசியக் கொடியை அமைப்பதற்கு மிஸ்ரர் எஸ் டபிள்யூ ஆர். டீ. பண்டாரநாயக்கா, மிஸ்ரர் ஜே. ஆர். ஜெயவர்த்தன, மிஸ்ரர் ஜே. எல். கொத்தலாவலை, மிஸ்ரர் ரீ. பீ. ஜயா ஸ்ரீ ஜீ ஜீ பொன்னம்பலம். திரு. எஸ் நடேசன் (மேற்சபைப் பிரதிநிதி) டக்ரர் எல் ஏ. ராஜபக்ஷி என்பவர்களைக் கொண்ட ஓர் சபை நியமிக்கப்படுமென்றும், அப்படியான ஓர் தேசியக் கொடி நிர்மாணிக்கப்படும்வரை, பிரிட்டிஷாரின் "யூனியன் ஜாக்" கொடியும் சிங்கக்கொடியும அரசாங்கக் கட்டிடங்களில் சுதந்திர விழாவுக்குப் பறக்கவிடவேண்டுமெனவும், சிங்கக் கொடியை ஆரோகணிக்க விருப்பமில்லாதவர்கள், தம் இடங்களிலே அதனை ஏற்றவேண்டியதில்லை என்றும் மிஸ்ரர் சேனநாயக்கா கூறினர்.

## மாவின் விலையேற்றம்

வருகிற பிப்ரவரி மாதம் தொடக்கம், மாவின்விலை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, இதுவரையுள்ள விலையிலிருந்து 00 க்கு 90 விகிதம் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது இதுவரை இறாத்தல் ஒன்று 19½ சதமாக விற்ற மாவின் கட்டுப்பாட்டுவிலை 37 சதம்வரையிருக்கும்.

இதுவரை இறக்குமதியான மா முதலிய உணவுப்பொருள்களுக்குரிய மிதமிஞ்சிய விலையை அரசாங்கமே கொடுத்துவந்தது அதாவது, கூடிய விலையில் வாங்கி, ஊரவர்களுக்குக் குறைந்த விலையில் விற்றுவந்தது. இனி அப்படி மா விஷயத்திற் செய்ய முடியாது என்று அரசாங்கம் தீர்மானித்திருப்பதே இந்த விலை அதிகரிப்புக்குக் காரணமாகும். சுதந்திர வாரத்தில் 2 படி அரிசியும், அதன்பின் ஒன்றேகால்படி அரிசியும் கிடைக்குமாகையினால், இந்த விலையதிகரிப்பு, ஊரவர்களை அதிகம் பாதிக்க மாட்டாதுஎன்று அரசாங்கம் கூறுகிறது.

# சுதந்திர இலங்கை வாழ்க!

பாராளுமன்றத்துப் பிரதிநிதி திரு, க. கனகரத்தினம் அவர்கள் சென்றவாரம புதுச்சேரியில் தவமியற்றும் ஸ்ரீ அரவிந்த மகான் ஆசிரமத்துக்கு விஜயம் செய்தார். அங்கே யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரையும் தரிசித்தார். இலங்கை சுதந்திர மடையவிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், ஸ்ரீ பாரதியார் ஓர் செய்தியை திரு. கனகரத்தினம் மூலமாக இலங்கை மக்களுக்கு அனுப்பியுள்ளார். இலங்கையின் தேசீயக்கோடி எங்ஙனமாக அமையவேண்டுமென்பதையும்யோகி பாரதியார் தமக்கே இயல்பாயுள்ள அன்பு மொழிகளால் இச்செய்தியில் அழகாக எடுத்துரைக்கிறார்:

*தீரசங்கராபரணம்* — *திஸ்ர ஏக தாளம்*

எங்கள்போன் இலங்கை வாழ்கவே—
இரவிபோல் அழகுபொலிகவே! [காலை
மக்களர் சுதந்திரக் கதிர்—வீசி
மடமை யடிமையச்ச மொழிகவே!
—(எங்கள்)

அன்புறுதி யுண்மை வீரமும்—காட்டும்
ஆண்மைச் சிங்கம் இலதுழந்நிறம்
நண்புமிக்க லங்கையின் கோடி—அதை
ஞாலமெல்லாம் புகழ நாட்டுவோம்.
—(எங்கள்)

தேன்கடலின் மார்ப கத்திலே—பூத்த
செழுந்திருக் கமலம் போன்றதே
பொங்குபுத்த சைவ நன்மணம்—வீசிப்
பொலிக நல்ல போகநாடிதே!
—(எங்கள்)

முத்தமிழ் முருகன் வீரமும்—சுத்த
மூர்த்தி யின்அருட் பகனலுடன்

புத்தரின் கருணை யுள்ளமுங்—கோண்ட
புனிதமான தரும பீடமாய் —(எங்கள்)

ஏசுநாதர் அன்பு வெள்ளமும்—தீன்
இஸ்லாமியரின்பக்தி உள்ளமும்
தேசுலாவு நாவலர் சோலும்—சைவத்
திருமறை யின்பயனு மோங்கவே.
—(எங்கள்)

சித்திர வியற்கை சூழவே—என்றும்
செயமணிக் கோடிகள் ஆடவே
நித்திலக் துவை நிலாவிலே—செல்வி
நிருத்தமிட் டழகு பொங்கவே.
—(எங்கள்)

அலைதரும் அளவில் செல்வமும்—ஒங்கு
மலைதரும் வளங் துலுக்கவே
கலைதரும் அறிவுச் செல்வமும்—மல்கக்
கடவுளின் அருட்கொசல் வத்தினல்.
—(எங்கள்)

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—49)

**பாக்கியலட்சுமி எழுதிய கடிதம்**

"எல்லாம்வல்ல இறைவன் கிருபையால் இனிதுவாழும் என் அருமையான தாயாருக்கும், அன்பான அண்ணுவுக்கும், ஆசைவான அக்காவுக்கும வணக்கத்துடன் எழுதிக்கொள்வது; இங்கு நாங்களெல்லோரும் ஆண்டவனருளாலும், உங்கள் அன்பு ஆதரவினலும் சுகமேயிருக்கின்றோம: சிலநாட்களாக நீங்கள் இங்கு வந்து நின்றபோது எங்கள் இல்லம் பொலிவாக விளங்க, நாங்களும் உங்களுடன் ஆநந்தமாகக் காலங் கழித்தோம் நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தபின், எங்கள் வீடு காடுபோற்புலப்பட, நாங்களும் உங்கள் பிரிவால் வருந்திக்கொண்டிருந்தோம்; இப்படியிருக்கும் போது, என் அருமையான அக்கா! எங்களெல்லாருக்கும் சந்தோஷமான நிகழ்ச்சி இப்பொழுது நிகழவிருக்கிறதென்பதை உங்களுக்குப் பணிவுடன் தெரிவிக்கிறேன்; உங்கள் அருமை மைத்துனர் நேற்றிரவு எங்கள் வீடுதேடி இங்கே வந்திருக்கிறார்; அவர் உங்கள் மைத்[illegible] முந்தியற் [illegible] சகல வரலாறுகளையும் தாமாகச் சொன்னர்; அவரைச் சிலகாலமாகக் காணமையால் அவருடைய பெற்றாரும் நீங்களும் படுந் துயரத்தையெல்லாம் விபரமாக எடுத்துச் சொன்னேம்; அவரும் உள்ளமுருகினர்: உங்களுக்கும் எங்களுக்குமுள்ள தொடர்பையும் அன்பையும் அவருக்குச் சொன்னேம் கேட்டு மகிழ்ச்சி யடைந்தார்; என்னுடைய இல்வரைக்கொண்டு உங்களுடைய விவாக விஷயமாக அவரைக் கேட்பித்தேன்: அது முந்தியே நிச்சயம்பண்ணிவைத்த விஷயந்தானே யென்று பதில் சொன்னர்; நீங்கள் இங்கு வந்திருந்தபோது உங்களுடைய சாதகத்தைப் பார்த்து எங்கள் புரோகிதர் சொன்ன சோதிடபலன் முழுவதையும் அவருக்கு விபரமாகச் சொன்னேம்; புரோகிதர் சோதிடத்தில் நிபுணர்போற் காணப்படுகிறார் என்று சொன்னர்; இவ்வளவுகாலமும் பெற்றார் உற்றாருக்கு நீங்கள் கடிதமெழுதவில்லையாமே, ஏன் அப்படி எழுதாமல் விட்டீர்கள் என்று கேட்டதற்கு, அவைகளுக்குக் காரணத்தைப் பிறகு சொல்லுவேன் என்கிறார்; சண்டைக் காலத்தில் நீங்கள் அதிக கஷ்டப்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புக் கொடியை ஏற்றுக

## தமிழ் மக்களிடையே மனக்கொதிப்பு

நயினை மணிபல்லவதேவி பொதுநிலக் கழகத்தில் பொதுக் கூட்டமொன்று 24-1-48ல் யாழ்ப்பாணம் பெரியகடை மைதானத்தில் நடைபெற்றது. அவ்வமயம் திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள் பேசியதாவது. யுத்த நெருக்கடியினாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும், வெள்ளப் பெருக்கினாலும், உணவின்றி, உடையின்றி வீடுமின்றி பல்லாயிரக் கணக்கான மக்கள் பிச்சைக்காரக் கூட்டங்களாய்த் திரிந்து மலிந்துகொண்டிருக்கும் இந்நேரத்தில இலங்கையின் மூக்கால்வாசி மக்களின் ஆதரவைப் பெறுமலும் மக்களின் பொருளாதாரத் துறையை அடமானம் வைத்ததுமான சுதந்திரக்கொடியேற்று விழாவுக்கு எட்டுலட்சம் ரூபாய் செலவில பொதுமக்களாகிய எங்களுக்கு விரோதமாக ஏற்ற நினைக்கும் ஒரு கொடியை சேனநாயக்க கும்பலின் யதேச்சாதிகாரத்தை முறியடிக்க நாம் எல்லோரும் முன்வரவேண்டும். அயல்நாடுகளில் பட்டொளி வீசப் பறந்துகொண்டிருக்கும் அன்புச் சுதந்திரக் கொடிகளை நாம் பார்த்து இருக்கிறோம்; ஆனால் மனிதத் தன்மைக்கு மாறான ஒரு மிருகத்தின் காலில் ஒரு வாளைக் கொடுத்து உலகத்தை அழிக்கும் விதமான பான்மையில் இருக்கும் ஒரு பயங்கரக்கொடியை இலங்கைத் தாயின் தேசியக்கொடி என ஏற்ற இருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி வாதிகளைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள் இது தேசியக்கொடியாகுமா? ஒரே ஐக்கிய உலகமென்ற முன்னேறிவரும் உலக மன்றங்களில் மிருகக்கொடியை எப்படி வணங்குவார்கள், பாராளுமன்றத் திறப்புவிழாவில் அலங்காரக் கொடியென்றும், சுதந்திரவிழாவில் தேசியக்கொடியென்றும், அறைகூவும் சேனநாயக்கா கோஷ்டியின் மனிதத்தன்மை யற்ற செயலை நாம் பலமாகக் கண்டிக்கிறோம். 27ம் திகதி பிரதிநிதிகள் சபையில் நடைபெறப்போகும் தேசியக்கொடி விவாதத்தில் சரியான ஜனநாயகக்கொடி நிறுவாவிடில் எங்கள் நாட்டில் கறுப்புக்கொடியை ஏற்றும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பின்பு தலைவர் திரு நா. கணபதிப்பிள்ளை அவர்களின் முடிவுரையுடன் கூட்டம் இரவு 9—30 மணியளவில் இனிது முடிவுற்றது.

O

### சிங்கக் கொடிப் பிரச்சினை

வடமாகாணத் தலைவர் (அரசாங்க ஏஜண்ட்) மிஸ்ரர் பீ. ஜே ஹட்சன், சென்ற வாரம் யாழ்ப்பாணக் கச்சேரியில் ஓர் மகாநாடு கூட்டினர். வரப்போகும் சுதந்திர தினக் கொண்டாட்டத்தை யாழ்ப்பாணத்தில் எவ்வாறு கொண்டாடலாம் என்பதை ஆலோசித்து ஓர் முடிவு செய்தற்பொருட்டே இம்மகாநாடு கூட்டப்பெற்றது,

இம் மகாநாட்டுக்குச் சமூகமளித்தோர் பின் வருவோராவர்:

மிஸ்ரர் பீ. ஜே. ஹட்சன் (தலைவர்), சங். ஜே. ரீ; அருளானந்தம் சங. ஏ. பீ கனகரத்தினம், சங். எம். நல்லையா, ஸ்ரீ சண்முகதாஸ் மாப்பாண முதலியார், வலி—வடக்குக் கிராமாதிகாரி திரு, ரீ. பாலச்சந்திரன், வலி—மேற்குக் கிராமாதிகாரி திரு ஜே. எம். சபாரத்தினம், பழைக் கிராமாதிகாரி திரு. எஸ். ஸ்ரீநிவாசன், பூநகரிக கிராமாதிகாரி ஆர். சிதம்பரப்பிள்ளை, யாழ்ப்பாணம் பிரதமகிராமாதிகாரி திரு எச் ஈ பிள்ளைநாயகம், தீவுப்பகுதிக் கிராமாதிகாரி எக்ஸ். எம். செல்லத்தம்பு, திரு. எம் குழந்தைவேலு. சிவஸ்ரீ எஸ். சுப்பிரமணியக் குருக்கள், சங. என். ரீ. ஆசீர்வாதம். மிஸ்ரர் ரீ. என் பீரிஸ். ஸ்ரீ சாந்த தீரோ (பௌத்த பிக்கு], ஸ்ரீ பி. விஸ்வநாதன், கோப்பாய்க் கிராமாதிகாரி ஸ்ரீ ரீ. முருகேசபிள்ளை, முதலியார் வி விஞசித்தம்பி.


மாகாணத் தலைவர் கூட்டங் கூடிய நோக்கத்தை எடுத்துரைத்தார். பிப்ரவரி 4—ம் திகதியை தேசிய பிரார்த்தனை தினமாகக் கொண்டாடுவது இலங்கைப் பிரதமரின் விருப்பம் என்று தெரிவித்தார்.

காலை 6 மணி தொடக்கம், காலை 11 மணிவரை பிரார்த்தனை நேரமாக வைத்துக்கொள்ளலாம் என்று மகாநாட்டிற்குச் சமூகமளித்தவர்கள் கூறினர்.

ஸ்ரீசெல்வச்சந்நிதிக் கோவில் குருக்கள், தேசிய தினம் கொண்டாடுவதை ஆட்சேபித்தார். இலங்கையரசாங்கம் புதுசதவிருக்கும் "தேசீய"க் கொடியில் தமிழ் மக்கள் இடம் பெறவில்லையாதலினால் இத்தேசீய தினக் கொண்டாட்டத்துக்கு ஜனங்கள் உற்சாகமடையவில்லை என்பதை அவர் எடுத்துக்காட்டினர். 'தேசியக் கொடி விஷயமாக எவ்விதமான முடிவும் இன்னும் செய்யப்படவில்லை எல்லாச் சமூகத்தினரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஓர் கொடியே கடைசியாக நிர்மாணிக்கப்படும் என்று நம்புகிறேன். இத்தேசியக் கொடி விஷயமாக ஏதும் மனக்கசப்பு அல்லது மனக்கிளர்ச்சி ஏற்பட்டால், அதனைச் சாந்தத்துடன் தடுத்துவிடுமாறு உங்களைக்

தொடர்ச்சி 4 ம பக்கம்

# அதிர்ஷ்டசாலி ஒலிவர்!



## பிரபுப் பட்டம் கிடைக்குமா?

சேர் ஒலிவர் குணத்திலகாவுக்கு கே. ஸி. எம். ஜீ பட்டம் வழங்கப்பட்டதைப் பாராட்டி ரீ. டபிள்யூ ஹொக்லி என்பவர் "ஸேர்ச்லைற்" பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:

"இனி, அடுத்ததாக சேர் ஒலிவருக்குக் கிடைக்கவேண்டியது ஜீ ஸீ எம் ஜீ பட்டம்தான். அதன்பின சுதந்திர ஸ்ரீ லங்காவின் முதன்முதல் சிங்கள கவர்ணர் ஜெனரலாக வருவது கஷ்டமல்ல. ஓர் பாய்ச்சலுடன் வந்துவிடலாம்.

"சேர் ஒலிவருக்கு மூன்றேமூன்று ஆசைகள்தான இப்போது உண்டு. ஒன்று இலங்கையின் கவர்ணர்ஜெனரலாவது. இரண்டாவது பிரிட்டிஷ் பாராளுமன்றத்துப் பிரபுக்கள் சபையிலே அங்கத்தவராய் வந்து பிரபுப் பட்டம் பெறுவது. மூன்றாவது தன்னுடைய குதிரை டேர்பிப் பந்தயத்தில் வெற்றிபெறுவது. இந்த மூன்று அபிலாஷைகளையும் பூர்த்தியாக்கினால் சேர் ஒலிவர் மேன்மேலும் விரும்பக் கூடியதும் ஒன்று உண்டா?

'இன்னோர் ஜோசியம் கூற விரும்புகிறேன்; குளோஸ்டர் கோமகன் இங்கே வரும்போது இங்குள்ளார்க்குக் கிள்ளித் தெளிப்பதற்காகிய பட்டங்களையும் கொண்டுவருவார். அந்தப் பட்டங்களில் ஒன்று நமது சிற்றம்பலம் கார்டினருக்கும் கிடைக்கும் இவ்விஷயத்தில் நான் பந்தயம் கட்டவும் தயார்.



# சுவாமி விவேகாநந்தர்

## வேதாந்தத்தின் வீரகேசரி

### அத்துவித நெறி விளக்கிய அண்ணல்

(க. இ.)

அடுத்த ஞாயிறு (1-2-48) விவேகாநந்தரின் ஜென்ம நட்சத்திரம் வருகிறது. அன்று அவர் பேரால் பல இடங்களில் கொண்டாட்டங்கள் நடைபெறும்.

திருத்தாண்டகம்.

தத்தர் செய்த தனித்தவத்தா லவதரித்து
தன்மயத்திற் சின்மயமாந் தன்மைபெற்றே
பித்தனென்ற பேர்படைத்த ராமகிருஷ்ணப்
பெருமானின் திருவருளுக் குரியானாகி
அத்துவித நெறிவிளக்குங் குரவனாயெம்
ஆன்றோர்கள் தேடிவைத்த ஞானப்பேற்றை
எத்திசையும் எடுத்தளித்த விவேகாநந்த
என்நல்பதம் ஏத்தியாம் வாழுவோமே.

* * *

வாழ்க, வாழ்க, வாழ்க, வாழ்க
வாழ்க, வாழ்க, வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
வாழ்க என்றும் வாழ்கவே.

1. வங்கமீன்ற சிங்கமான
விரதன் - பாதம் வாழ்கவே
எங்குங் கீர்த்தி தங்கவைத்த
துங்கன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

2. தத்தர் குடும்பஞ் சிறக்கவுந்
தரணிமுழுதும் உய்யவுஞ்
சித்தருலகை விட்டிவர்ந்த
செம்மல் பாதம் வாழ்கவே (வாழ்க)

3. புவனேஸ்வரி தவத்துதித்த
புதல்வன் பாதம் வாழ்கவே
அவனி முழுதும் அருள்கொடுத்த
அண்ணல் பாதம் வாழ்கவே (வாழ்க)

4. பாரதத்தின் பரமார்த்திகத்தைப்
பரப்பவந்தோன் வாழ்கவே
பரமஹம்ஸர் பரிந்தெடுத்த
பண்பன் பாதம் வாழ்கவே (வாழ்க)

5. வேதார்த்தத்தின் வீரகர்ஜனை
விளக்க வந்தோன் வாழ்கவே
நாதாந்தத்தின் நிலையுணர்ந்த
நரேந்த்ரன் பாதம் வாழ்கவே (வாழ்க)

6. சிக்காக்கோவில் சிறப்படைந்த
செல்வன் பாதம் வாழ்கவே
எக்காலத்தும் [illegible] கீர்த்தி
[illegible] வாழ்கவே— (வாழ்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருகிறார்கள்!

## சுதந்திரக்கொண்டாட்டத்துக்கு அயல்நாட்டுப் பிரமுகர்

இலங்கையின் சுதந்திரக்கொண்டாட்டத்திற் பங்குபற்றுமாறு, இலங்கையரசாங்கம் 250 அழைப்புத்தாள்கள் உலகில் உள்ள பல பிரமுகர்களுக்கு அனுப்பியுள்ளது. இவர்களில் ஒரு சிலரே இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டனர், இங்கிலாந்திலிருந்து பின்வருவோர் வருவார்களாம்-

குடியேற்றநாட்டு மந்திரி லிஸ்டோவல் பிரபு: இவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதிநிதியாக வருவாராம். இவரை விட மூன்று பிரமுகர்களும் வருவர்,

தென்கிழக்கு ஆசியாப் பகுதியின் விசேஷ கமிஷனராயுள்ள கிலியார்ண் பிரபு, சிங்கப்பூர்த் தேசாதிபதி சேர். பிராங்க்லின் ஜிம்சன், அவர் மனைவியும் அவர் காரியதரிசியும் விஜயம் செய்வார். இவரைவிட மலேயன் யூனியன் தேசாதிபதி சேர எட்வர்ட் கென்ற் என்பவரும் வருவராம்;

இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக பாபு ராஜேந்திர பிரசாத் விஜயம் செய்வார்; இன்னும் போபால் நவாப் ஸ்ரீ ரீ. ஆர், வெங்கட்ராம சாஸ்திரி, சேர், மிர்ஸா இஸ்மெயில், குமாரராஜா சேர் முத்தையா செட்டியார் என்பவர்களும் வருவர்;

குளோஸ்ரர் கோமகனும் அவர் குடும்பத்தினரும், இலங்கைக் கவர்னர் ஜெனரலின் விருந்தினராக விருப்பர்.

லிஸ்ரோவல் பிரபு, பாபுராஜேந்திர பிரசாத், மலேயாத் தேசாதிபதி முதலியவர்கள் சேனநாயக்காவின் விருந்தினராக விருப்பர்.

கிலியார்ண்பிரபுவும் அவர் மனைவியும் மிஸ்ரர் மொலமுரேயின் விருந்தினராக விருப்பர்; பர்மாப் பிரதிநிதிகளை மிஸ்ரர் பண்டாரநாயக்கா வற்று உபசரிப்பார்;

போபால் நவாப், பாகிஸ்தான் பிரதிநிதிகள், மிஸ்ரர் கொத்தலாவலையின் விருந்தினராக விருப்பர்;

சங்கீதமணி

# ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்

[தியாகராஜ சுவாமிகள் தினம் இந்த மாசம் 30, 31-1-48 இந்தியாவிலும், இலங்கையிலும் பல இடங்களிலும், கொண்டாடப்படுகிறது.]

(சங்கீத பூஷணம், திரு P. சந்திரசேகரம்)

சாதாரணமாகக் கோவிலில் சுவாமி சந்நிதானத்தில் யாராவது ஒருவர் கானத்தினால் தெய்வத்தைப் பூஜிக்கும் பொழுது பாமர ஜனங்களும், படித்தவர்களும் அவர் பாடுஞ் சங்கீதத்தினால் இழுக்கப்பட்டு அவர்களை யறியாமலே தெய்வத்தின் அருளைப் பெறச் சாத்தியமாகிறது. இதேகாரணத்தை முன்னிட்டே நமது சைவ சமயக் கோயில்களில் இன்றும் தேவார திருவாசகம்முதலிய அருட்பாக்கள் பூஜை முடிவில் ஓதப்பட்டு வருகிறது. அத் தேவார திருவாசகத் திருமுறைகளை எமக்குச் சமய குரவர்கள் அளித்தார்கள் அவர்களைப்போலவே கேவலம் இறைவனை இசையே உருவினராகக் கொண்டு தம்மை முழுதும் இசைமயமாக்கிச் சாதாரண மக்களைப்போல இல்லற வாழ்க்கையிலிருந்தே இசையால் எளிதாய்த் தெய்வத்தை வழிபட்டு முக்தியடைந்தவர் சங்கீதமணி ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள். என்பவராவார்.

ஸ்ரீ தியாகராஜசுவாமிகளை இன்று சங்கீத வித்வான்கள் அபிமானிகள் சகலரும் குருவாகக் கொண்டாடி, அவர் உருவத்தைப் பூசைசெய்து வருகிறார்கள். சுவாமிகள் 1767 ம் ஆண்டு மேமாசம் 4-ந் திகதி அன்று திருவாரூரிற் பிறந்து 1867-ம் ஆண்டு ஜனவரி மாசம் 6-ந் திகதி பஞ்சமித் திதியில் சமாதியடைந்தார். இவர்தான இக்காலம் நடைமுறையிலிருக்கும் இசைக்கலைக்குக் காரண கர்த்தாவாயுள்ளவர் இவரது வாழ்க்கையிற் பல ஆச்சரியகரமான சம்பவங்கள் நடந்தன. ஸ்ரீராமபிரான் நேருக்குநேராக நின்று இவரைக் கடாக்ஷித்தருளினார். ஸ்ரீ நாரத சுவாமிகளே நேரே இவருக்குப் பிரசன்னமாகி 'ஸ்வரார்ணம்' என்ற சங்கீத நூலை அளித்தார் என்பர். முன்னர் ஒருகால் (சங்க காலங்களில்) அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்ட இசைக் கலை, ஊழிக்காலத்தின்போதும் பௌத்தர் போன்ற பிற மதத்தினர் தமிழ்நாட்டிற் புக்கமையாலும், அழிவுற்றுக்குன்றியது. இடைக்காலத்தே இசைக்கலை விருத்தியில்லாது அழிந்தொழியும் அமையம் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் தோன்றிக் கடவுளருளால் தமக்கு முன் சம்பிரதாயமே இல்லாத சங்கீதக் கலையை உருவகப்படுத்திப் பல்லவி, அநுபல்லவி, சரணங்கள், சங்கதிகள், சிட்டாஸ்வரங்கள் என்ற பகுதிகளைச் சிருஷ்டி செய்தார் இவர் ராமபிரானிடமுள்ள தமது அடங்காப் பக்தி வலிமையால் இராமாயணத்தையே ஆதாரமாகக் கொண்டு இராமன்பேரிற் கீர்த்தனைகள் பாடுவாராயினர். இவர் தமது தாய்ப்பாஷையாகிய தெலுங்கிலேயே கீர்த்தனைகளை ராகபாவமுந் தாளநடையும் மிகவும் சுலபமாகவும் தெளிவாகவும் வெளிப்படும்படி பாடிவந்தார். சுவாமிகள் தமது வாழ்க்கையில் தினமும் ஒவ்வொரு நிமிடமும் தமது மனச்சேஷ்டைகளுக் கிடங்கொடுக்காது பேராடி ஈசனையே எண்ணியவராய் அச்சந்தர்ப்பங்களை ஒட்டித் தம்மை ரக்ஷிக்குமாறு இராமபிரான்பேரிற்பத்திச் சுவை சொட்டச்சொட்டப் பாடிய கீர்த்தனங்கள்தாம் இன்று எம்மனைவராலும் பாடப்பட்டு வருந் தியாகராச கீர்த்தனங்கள்.

தெலுங்கு மொழியிலேயே தியாகராசசுவாமிகள் கீர்த்தனங்களைச்செய்ததற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவது அவருடைய தாய்ப்பாஷை தெலுங்கு. இரண்டாவது அவரிருந்த காலம் அவ்வூர்த் தெலுங்கு ராசாக்களால் ஆளப்பட்டமை. மூன்றாவது தெலுங்குப் பாஷைதான் சங்கீதத்துக்குப் பொருத்தமாயும் உச்சரிப்பதற்கு வெகு மிருதுவாயும், ராகபாவங்களைக் காண்பிப்பதற்குப் பதங்கள் பெரும்பாலும் உயிரெழுத்துகளிலேயே முடிவதாகவும் இருப்பது. ஆகலால் அவர் கீர்த்தனங்களைத் தெலுங்குப் பாஷையிலேயே அமைத்துவிட்டார்.

சங்கீதமென்றவுடனேயே தியாகராஜ சுவாமிகளும் அவருடைய கீர்த்தனங்களுமே எமதுநினைவிற்கு முதல் வந்துவிடுகின்றன. கீர்த்தனங்களியற்றுவதிலும், சங்கீத ஞானத்திலும் அவருக்கு நிகர் அவரேயாவர். அவர் சாதாரண மானுடரல்லர். பகவானே பூலோகத்தில் இசைக்கலை இன்னதென்பதை அறியப்படுத்தவந்த அவதார புருடர் அவர் என்பர். இவரைத் தவிர இவர் காலத்திலேயே முத்துச்சுவாமி தீக்ஷிதர், சாமா சாஸ்திரிகள் ஆகிய வேறிருவரும் புகழ் பெற்றுப் பக்தியில்மேம்பட்ட சித்தர்களாக இருந்தார்கள். இம் மூவரையுமே இசையுலகம் 19-ம் நூற்றாண்டுச் சங்கீத மும்மணிகள் என்று புகழ்ந்து கொண்டாடுகிறது. இப்பேர்ப்பட்ட மகானின் ஆராதனை மகோற்சவத்தைத் தமிழ், தெலுங்கு நாடுகளிலுள்ளவர்களும் நாமும் மிகவும் விமரிசையாக இன்று கொண்டாடுகிறோம். அது சாலவுஞ் சிறந்தது. உண்மையாகவே இம மகோற்சவ நிகழ்ச்சியை நாம் திருவையாற்றில்—சுவாமிகள் சமாதிக் கோவிலில் ஆராதனை நடக்கும் நாட்களிற் போய்ப் பார்க்கவேண்டும். தென்னிந்திய சங்கீத வித்துவான்கள் அனைவரும் ஓர் அன்னைவயிற்றுப் பிள்ளைகள்போல் ஆராதனை நாள் ஒன்றுகூடிச் சுவாமியைத் தரிசிப்பார்கள், ஒவ்வொருவரும் தனித்தனியாகவும் எல்லோரும் ஒன்றுகூடியும் சுவாமிகள் கீர்த்தனங்களை ஆனந்தக்கண்ணீர் கண்களின் கடைகளாற் சொரிய ஊன், என்பு, மனம் மூன்றும் ஒருங்கே அழலிடைப்பட்ட மெழுகது பால் உருக உருகப் பாடுவார்கள். தங்களை முற்றிலும் மறந்து சுவாமியின் சேவையில் ஈடுபட்டிருப்பார்கள். இதைப்பார்க்க ஆயிரக்கணக்கான மக்கள் வந்து குவிவார்கள். இவ்வித வித்துவான்களின் லயிப்பு நிலைமையைப் பார்த்ததும் ஜனங்களுக்குத் தங்களையறியாமலே உரோமஞ் சிலிர்த்து, உணர்ச்சியற்ற ஒரு ஞான இன்பநிலை ஏற்பட்டுவிடும். அங்கு நிஜப்தமே குடிகொள்ள வித்துவான்களின் இன்னிசை ஒன்றே நாலாபக்கமும் பரந்துசெல்லும். ஆ! அதல்லவோ சிவலோகம் உண்மையாகவே இசைவாணி காட்சியளிக்கும் திருமன்றம். தியாகராசசுவாமிகள் நேரே பிரத்தியக்ஷமாகி வித்துவான்கள் மூலம் உண்மை இசை இன்னதென்பதை வெளிக்காட்டுமிடம் — இசையின் கடைசி இன்பநிலையைப் பார்க்கவேண்டுமானால் ஆங்குப் போதல் வேண்டும்.

இசையினால் இறைவனை வழுத்துவோம்.

## பகிஷ்காரம்

இலங்கை இடது சாரிக்கட்சியினர் சுதந்திரதினக் கொண்டாட்டத்தைப் பகிஷ்கரிக்க முடிவுசெய்துள்ளனர்;

# திருச்சி ரேடியோ

சனி ஜனவரி 31

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 திருச்சூர் பி ராதாகிருஷ்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 எம் பத்மநாபன் வயலின் 8 30 காலை இசை இசைத்தட்டு 9 முடிவு

1 எம் பத்மநாதன் வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 05 சர்வகலாசாலைக் குறிப்பு 2 15 சுவாமிமலை எஸ் கலியாண சுந்தர தேசிகர் பாட்டு 2 45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 சுவாமிமலை எஸ் கலியாணசுந்தர தேசிகர் பாட்டு 5 40 அருட்பா திருவந்தாதி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருச்சூர் பி ராதாகிருஷ்ணன் பாட்டு 7 15 தமிழ் வளர்ச்சி 7 30 தமிழில் செய்திகள் 7 45 தியாகராஜ கீர்த்தனை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப்பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 பஞ்சரத்ன கீர்த்தனைகள் 10 30 முடிவு.

ஞாயிறு பிப்ரவரி 1

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 கோயமுத்தூர் வி ராஜலட்சுமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 சரஸ்வதி துரைசாமி வீணை 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12 30 வாடகை கிடைத்தது 12 40 ரத்னம்பரி நாட்டியகீதம் 12 45 குறுக்கு விசாரணை 4 12 50 கானக மோஹினி இசைநாடகம் 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 மருங்காபுரி கோபாலகிருஷ்ண ஐயர் வயலின் 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2 45 முடிவு.

மாலை 5 கோயமுத்தூர் வி ராஜலட்சுமி பாட்டு 5 40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சரஸ்வதி துரைசாமி வீணை 7 30 தமிழில் செய்திகள் 7 45 புத்தக விமர்சனம் 8 மாயவரம் எஸ் ராஜம்ஐயர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 சித்ரகானம் இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 எஸ் எஸ் பரமசிவம்பிள்ளை 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

திங்கள் பிப்ரவரி 2

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி கே ஆர் மாரிக்கண்ணு பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் ஆ இரே வித்வான்கள்தயாரிப்பு 8 30 பட்டுக்கோட்டை எ பாலசுப்பிரமணியம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பட்டுக்கோட்டை எ பாலசுப்பிரமணியம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 டி கே ஆர் மாரிக்கண்ணு பிள்ளை நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 தொழில் உற்பத்திப் பெருக்கம் 8 கல்லிடைக்குறிச்சி எஸ் ஹரிஹர ஐயர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 டி ஆர் கிருஷ்ணமாச்சாரி வீணை 10 இசைவேளை (இசைத்தட்டு) 10 30 முடிவு.

செவ்வாய் பிப்ரவரி 3

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில செய்திகள் 7 30 பி ஜெ ரத்தினவர்மா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 ஜானகி ராமமூர்த்தி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பி ஜெ ரத்தினவர்மா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2 45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 எச் ராமச்சந்திரசாஸ்திரி புல்லாங்குழல் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 தாளவாத்யக் கச்சேரி 7 30 தமிழில செய்திகள் 7 45 செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 டி எஸ் உலகநாதன் வயலின் 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.


## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிவிஷன் தென்மராட்சிப் பகுதி, மறவன்புலவிலுள்ள கிரைவாய்க்காலுக்கு ஓர் கொங்கிறீற் அணைகட்டுவதற்கு வடமாகாண எசண்டரவர்கள் 1948 ம் ஆண்டு பெப்ரவரி — மாசி மாதம் 17 ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணி வரைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்கள். குறித்த விண்ணப்பப் பத்திரங்களை ரூபாய் 25 கச்சேரியிற் கட்டி வடமாகாண எசண்டர் கையொப்பமிட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும ஒவ்வொரு பத்திரமாக 1948 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ந் திகதி சனிக்கிழமை பகல் 2 மணிக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். மறு விபரங்களை வடமாகாண எசண்டரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

G 152 30


### கறுப்புக் கொடியை ஏற்றுச

3-ம் பக்கத் தொடர்ச்சி

கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று மிஸ்ரர் ஹட்ஸன் கூறினர்.

○

**வவுனியாவில்**

வவுனியாவிலும் இப்படியான ஓர் மகாநாட்டை உதவி மாகாணத் தலைவர் கூட்டியபோது மிஸ்ரர் வ. ஆர். ஜேம்ஸ் என்பவர் சிங்கக்கொடி விஷயமாக ஆட்சேபித்தார்.

## மாசி மாச விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 1ந் தேதி | (13-2-48) | வெள்ளி, ஊரெழுப் பிள்ளையார் கோவில் கொடியேற்றம். |
| 3 ,, | (15-2-48) | ஞாயிறு, திருச்செந்தூர், கெருடாவில் கந்தசுவாமிகோயில், நாவலப்பிட்டி முத்துமாரியம்மை, மாத்தளை முத்துமாரியம்மைகொடியேற்றம். |
| 5 ,, | (17-2-48) | செவ்வாய், கார்த்திகை விரதம். |
| 10 ,, | (22-2-48) | ஞாயிறு, பிரதோஷ விரதம். |
| 11 ,, | (23-2-48) | திங்கள் நடேசர் அபிஷேகம். |
| 12 ,, | 24-2-48) | செவ்வாய். பூரணை விரதம், மாசி மகம. |
| 14 ,, | (26-[illegible]-48) | வியாழன், திருவள்ளுவர் குருபூசை. |
| 15 ,, | (27-2-48) | வெள்ளி, எறிபத்தநாயனர் குருபூசை. |
| 18 ,, | (1-3-48) | திங்கள் பருத்தித்துறை சித்திவிநாயகர் கோயில், துன்னாலை கோயிற்கடவைப் பிள்ளையார் கோயில், ராமேஸ்வரம் கொடியேற்றம். |
| 22 ,, | (5-3-48) | வெள்ளி, காரியார் நாயனர் குருபூசை. |
| 25 ,, | (8 3-48) | திங்கள், பிரதோஷ விரதம். |
| 26 , | (9-3-[illegible]8) | செவ்வாய், மகாசிவராத்திரி விரதம், வல்லை வைத்தீஸ்வரர்கோயில்கொடியேற்றம், வண்ணை வீரமாகாளியம்மை கோயில் சங்காபிஷேகமும் தண்டிகை உற்சவமும், கோட்செங்கட் சோழ நாயனர் குருபூசை. |
| 27 ,, | (10-3-48) | புதன், அமாவாசைவிரதம் சிவராத்திரிதீர்த்தம். |
| [illegible] ,, | ([illegible]) | சனி, இணுவில் சிவகாமியம்மை கோயில் கொடியேற்றம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2 ம்பக்கத் தொடர்ச்சி

பட்டுவிட்டீர்கள்போலும் என்று என்னுடைய இவர் கேட்க, படவேண்டியதைப் பட்டுத்தானே தீரவேண்டும என்கிறார். நீங்கள் இங்கு வந்திருப்பதாகிய சந்தோஷமான செய்தியை உங்கள் மாமியாருக்கும் என் அண்ணனுக்கும் அக்காளுக்குந் தெரிவிக்கலாமோ ஐயா, என்றுகேட்டேன்; "தெரிவிக்கலாந் தங்கைச்சி" என்று எனக்குச் சொன்னார்; அவர் எங்களோடு ஊடாடும் முறைக்கும் பாராட்டும் அன்பிற்கும் எங்கள் அண்ணர் எங்களோடு ஊடாடும் முறைக்கும் பாராட்டும் அன்பிற்கும் எவ்வகையான வித்தியாசமுமில்லை அக்கா; அவரோடு வார்த்தையாடும் போதெல்லாம் எங்கள் அண்ணருடைய ஞாபகமே வருகிறது, அவருக்கும் அண்ணுவுக்கும் பேச்சிலே தோற்றத்திலே அதிக வித்தியாசமில்லை; 'ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை—இருநிலம் பிளக்க வேர் வீழ்க் கும்மே" என்று நான் சிறுவயசிற் படித்த பாட்டின் பயனை இப்பொழுதுதான், அக்கா, கண்டேன்; "ஐயா, உங்கள் விவாக விஷயமாக எங்கள் தாயாருக்கும் அண்ணுவுக்கும் நான் ஏதும் எழுதலாமோ" என்று அவரைக் கேட்டேன்: "அந்த விஷயமாக, என்ன அம்மா எழுதப்போகிறீர்' என்று அவர் கேட்டார்; நான் அதற்குப் பதில் சொல்வதற்கிடையில் என் பக்கத்தில் நின்ற தங்கைச்சி தனபாக்கியம் "ஐயா, எழுதுவது வேறென்ன? நீங்கள் இங்கே வந்து சேர்ந்துவிட்டீர்கள்; உங்களுக்கும், எங்கள பெரிய அக்காவுக்கும விவாகத்திற்கு நாள் குறிப்பது எப்போது? என்றுதான் அவர்களுக்கு எழுதிக் கேட்கப்போகிறோம்" எனச் சொல்ல, அவர் புன்னகை செய்து 'மகளே, என்னை எவரும் விரும்பிக் கணவனுகக் கொள்ளக்கூடிய நிலைமையில் நான் இப்பொழுது இருக்கவில்லை" என்று பதில சொன்னார்; உடனே நான மனம் வருந்தி "ஏன்? ஐயா, அப்படிச் சொல்லுகிறீர்கள்' என்று கேட்டேன்; அப்பொழுது அவா கவலைப்பட்டு எங்களைப் பார்த்து "நீங்கள் உலகத்தின் இயல்பு அறியாச் சிறுபெண்கள்; நான் யுத்தகாலத்திலே உத்தியோகமிழந்து அரிச்சந்திரன் படாத பாடெல்லாம் பட்டுக் கையில் மடியில் பணம் பண்டமற்றவனுய். ஆனல் எங்கள் சாதிக்குரிய மானத்தைமாத்திரங்கை விடாமல் ஒட்டாண்டிபோல் வந்து, உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டு இப்பொழுது உங்களிடம் வந்து ஒதுங்கி நிற்கிறேன்; இந்தநேரத்தில்எனக்கும விவாகத்திற்கும் இல்லறத்திற்கும் வெகுதூரம்" என்று சொல்லுகிறார்; அப்படி அவர் சொன்னபோது என்னுடைய இவரும் நானும் அவரைப் பார்த்து, "ஐயா, ஏன் இப்படிச்சொல்லுகிறீர்கள்! உங்களுக்கு ஒரு குறையுமில்லை; நீங்கள் புதிதாக எங்கேனும் சம்பந்தஞ் செய்யவேண்டி நேர்ந்தால்லவோ உப்படிப் பணமில்லை, பொருள்பண்டமில்லை, உத்தியோகமில்லை, என்றெல்லாம்யோசிக்கவேணும்; இந்தச் சம்பந்தம் சொந்தத்துக்குள் தானே; என் அருமை அக்காளினிலோ உங்களைத் தான் சின்ன வயசிலேயே மனத்தில் வரித்துக்கொண்டதாகவும், வேறு சம்பந்தம் செய்யக் கனவிலும் நினைப்பதில்லை யென்றும் வைராக்கியம் பூண்டு, சதா உங்கள் தியானமாகவே இருக்க, நீங்கள் இப்படிச் சொல்லலாமா? என்றெல்லாம் சொன்னேம்; அதற்கு அவர், தாமும் விவாகஞ் செய்வதானல், உங்களையே விவாகஞ் செய்வதெனவும், இல்லையேல் துறவியாகக் காலங்கழிப்பதெனவும், ஒருவன் இல்வாழ்க்கையுட் புகமுன் போதிய பொருளை நீதியான வழியில் ஈட்டிக்கொள்ளல் வேண்டுமெனவும், இல்லையேல் இல்லறத்தைக் காட்டிலும் துறவறமே சிறந்ததெனவும், மனைவியாய் வரவிருப்பவளின் சீதனத்தை நம்பியும், பிறர் பொருளுதவி செய்வாரென எண்ணியும் இல்லறத்திலே புகுதல் மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதுபோலாகுமெனவும், எக்காலத்திலும் ஏற்பிகழ்ச்சியெனவும், நளமகாராசன்கூட நாடு நகரைப் பறிகொடுத்துச் செல்வமெல்லாமிழந்து உடுக்கத் துணிதானுமின்றித் தன் மனைவிமக்களுடன் நாட்டை விட்டுக் காட்டகத்தே போன போது, அவனுடைய தேவியாகிய தமயந்தி சிந்தை வருந்தி, அவனை நோக்கி, "அரசே, உங்கள் மாமனர் மாளிகைக்குப் போவோம் வருதிர்' என இரந்து கேட்டபோது அவனைப் பார்த்து,

> "சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர் பாற்சென்று(ஈ)
> எனக்கேன்னுமிம்மாற்றம் கண்டாய் — தனக்குரிய
> தானந் துடைத்துத் தருமத்தைவேர்பறி
> மானந் துடைப்பதோர் வாள்." [த்து

என அக்காலத்திற் சொன்னது பொய்யாமோ எனவும நியாயம்பேசுகிறார்; எங்கள் சாமியாரைக்கொண்டு உங்கள் மைத்துனருக்குப் புத்தி சொல்லுவிக்கலாமோ என்றால், சாமியார் எங்கள் வித்தியாசாலையில் மூன்றுவார விடுமுறைநாள் பெற்றுக்கொண்டு சிதம்பரதரிசனத்தின் பொருட்டுப் போய்விட்டார்; இதனல் இன்று அதிகாலையில் என்னுடைய இவர் எங்கள் புரோகிதரிடம் போய் அவரை யழைத்துவந்து உங்களுடைய மைத்துனரையும் புரோகிதரையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தினர்; புரோகிதர் தீமையான காலமெல்லாம் கழிந்துவிட்டதென்வும் இனிமேல் நல்லகாலம் பிறக்கப்போகிறதெனவும் பலன் கூறிப் பலவகையானபுத்தி சொன்ன பிறகுதான் உங்கள் அருமை மைத்துனர் விவாகஞ்செய்ய ஒருவாறு உடன்பட்டிருக்கிறார். வருகிற வெள்ளிக்கிழமை யிரவு 8 மணிக்குமேல் விவாகத்திற்காகிய நாளெனவும எங்கள் புரோகிதர் நிச்சயம்பண்ணியிருக்கிறார்; ஆனதால் உவ்விடத்தில் ஆகவேண்டியன செய்யுங்கள்; கடவுளருளால் எல்லாம் இனிது நிறைவேறும்; மாப்பிள்ளை செய்யவேண்டிய ஆயத்தங்களை யெல்லாம நாங்கள் இங்கே செய்து, புரோகிதரையும் உடனழைத்துக் கொண்டு மாப்பிள்ளையோடு உவ்விடம் வெள்ளிக்கிழமை அதிகாலை உங்கேவந்து சேரத்தக்கதாய்ப் புறப்படுவோமென எழுதும்படி என்னுடைய இவர் எனக்குச் சொன்னர்; அதன்படியே இக்கடிதத்தை எழுதலானேன்; அண்ணுவுக்கு இவர் எழுதிய கடிதமும் அதற்குளிருக்கிறது இன்னும் இங்கே எங்களால் ஆகவேண்டியவை யிருந்தால் உடனே தெரிவியுங்கள்: எல்லாருக்கும் நமஸ்காரம்; இங்ஙனம்,

உங்கள் அன்புள்ள தங்கை,

**வி. பாக்கியலட்சுமி**

இக்கடிதமே கண்ணகியம்மை சிவகுருநாதன் பாக்கியலட்சுமி இராமன் என்னு மிவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியை விளைத்ததாகும் (வரும்)

---

### விவாக நன்கொடை

தொல்புரம் "தாமரைப்பிட்டி"சா கிருஷ்ணபிள்ளை அவர்கள் தமது சிரேஷ்ட புத்திரியின் விவாக வைபவத்தில் சந்தோஷ நன்கொடையாக கோப்பாய் இந்து மகாசபைக்குக் கொடுத்துதவிய ரூபா ஐம்பதையும் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொண்டோம்.

பெ. கணேசலிங்கன்
தனதிகாரி

கடிதம்

## வேலணை அரசினர்மத்தியபாடசாலை

ஐயா,

1945-ம் ஆண்டு முற்பகுதியில்வலிகாமம் மேற்குப்பகுதிக்கும் தீவுப்பகுதிகளுக்கும் பயன்படக்கூடியதாக ஓர் அரசினர் மத்திய பாடசாலையை வேலணை கிழக்கில் காலஞ்சென்ற திரு. மு. சோமசுந்தர மணியகாறனுடைய பாரியார் அரசினருக்கு நன்கொடையாகக் கொடுத்த நிலத்தில் நிறுவ அரசினரால் தீர்மானஞ் செய்யப்பெற்றது. பின்புபல பெரியார்கள் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலைக்கணித்தாகவுள்ள சில காணிகளை விலைக்கு அரசினருக்குதவி அக்காணிகளில் அதனை அமைக்கவேண்டுமென விரும்பி முந்திய தீர்மானத்தை மாற்றுவித்தார்கள். காணிக்காறருடன் காணிகளை விலைக்குவாங்குதற்கு விலை பேசினர்கள். அக்காலத்தில் வேலணைக் கிராமச்சங்கத் தலைவராகவிருந்த திரு. இ. மருதையனர் அவர்கள் குறித்த காணிகளை விலைக்குப் பெறுவதற்கு எங்கள் தீவு வாசிகளிடமும் பிறரிடமும் ரூபா 115000-க்கு மேல் சேர்த்தார்கள.

1945-ம் ஆண்டு பிற்பகுதியில் குறித்த அரசினர் மத்திய பாடசாலையை வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக் குருபூசை மடத்தை இதற்காக இடித்துக் கட்டிய கட்டடத்திலும் வித்தியாசாலைக் கட்டடத்திலும் தற்காலிகமாகத் தாபித்தார்கள். சைவப்பிரகாச வித்தியாசாலைப் பிள்ளைகளுக்குக் குறித்த வித்தியாசாலை நிலத்தில் ஓர் கிடுகுக் கொட்டகையைக் கட்டிக்கொடுத்தாகள். 1946ம் ஆண்டு மழைக்காலத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கென அமைத்த கிடுகுக் கொட்டகைக் கப்புகள் பாறி விழுந்துவிட, சைவப்பிரகாச வித்தியாசாலை வகுப்புகளை இரு வீடுகளின் விறாந்தைகளில் வைத்துப் படிப்பித்தார்கள். 1947—ம்ஆண்டின் நடுப்பகுதியில் சைவப்பிரகாச வித்தியாசாலை வகுப்புகளுக்குப் பழைய கட்டடத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு அரசினர் மத்திய பாடசாலைக்குப் புதுக் கிடுகுக் கொட்டகைகளைக்கட்டி அவற்றில் இப்பொழுது அதனை வைத்து நடத்துகின்றார்கள்.

அரசினர் மத்திய பாடசாலை தொடங்கி இரண்டுவருடங்களுக்குமேலாகியும் இன்னும் அதற்குச் சொந்த நிலம் வாங்கப்பெறவில்லை. வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கணித்தாகவுள்ள காணிகளை விலைக்குப் பெறும் நோக்கமாக அவை அளக்கப்பெற்றன. விலையும் மதிக்கப்பெற்றது. இப்பொழுது அரசினர் மத்திய பாடசாலையை சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு மேற்கே சரவணை நாற்சந்திக் கணித்தாக அமைப்பதற்குச் சிலர் முயற்சி செய்கின்றார்களென அறிகின்றோம். வேலணைக் கிராமச்சங்கமும் அவ்வாறு தீர்மானஞ் செய்துள்ளதாகவும் அறிகின்றோம். வேலணைக் கிராமச்சங்கம் செய்துள்ள தீர்மானம் முறைமையானதாகத் தோன்றவில்லை. ஏனெனில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட கூட்ட அறிவித்தலில் அவ்விஷயம் சேர்க்கப்படவில்லை. அல்லாமலும் குறித்தகிராமச் சங்க அங்கத்தவருள் நால்வர் ஷெ தீர்மானம் நிறைவேறிய தேதிக்கு முன் தங்கள் அங்கத்துவத்தை ராஜினாமாச் செய்துள்ளார்கள். அவர்களுடைய வட்டாரங்களுக்கு புதுப் பிரதிநிதிகள் இன்னும் தெரிவு செய்யப்படவில்லை. விலகினவர்களில் இ. மருதையனரும் ஒருவர். அரசினர் இவ்விஷயத்தை பொதுசனங்களுடன் கலந்து யோசித்து பெரும்பாலார்சம்மதத்துடன் நிர்ணயித்த ஒரு இடத்தில் மத்திய பாடசாலையைநிறுவுதலே

திரு. இ. மருதையனரவர்கள் மத்திய பாடசாலைக்குச் சேர்த்த பணத்தைப்பற்றிய கணக்குகளை இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் வெளியிடவில்லை. யார்யார் பணங் கொடுத்தார்கள்; என்ன தொகை சேர்ந்தது எவ்வளவு செலவாய்விட்டது? இப்பொழுது எவ்வளவு இருக்கின்றது? என்னும் விபரங்களை அவர் வெளியிடவேண்டும? வித்தியாதிகாரிகள் இவ்விஷயத்தை நன்கு விசாரணைசெய்து திரு. இ மருதையனரவர்களைக் கணக்கு விபரங்களைப் பத்திரிகைகள் வாயிலாக வெளியிடச் செய்தல் நலமாகும். அப்பொழுதுதான் பொதுசனங்கள் இப் பணவிஷயமாகக்கொண்டுள்ள சந்தேகங்கள் நீங்கும். இதற்கெனச் சேர்த்த பணத்தைத் தனிப்பட்ட ஒருவரிடம் இன்னும் இருக்கவிடுதல் முறையல்ல. அதனை அரசினர் பெற்று வேலணை அரசினர் மத்திய பாடசாலைக்கணக்கில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக் கட்டடங்களில் அரசினர் மத்திய பாடசாலையை ஆரம்பித்துத் திறப்புவிழாவைக் கௌரவ கல்வி மந்திரி கன்னங்கரா அவர்களை அழைத்துக் கொண்டாடினபோது திரு. இ. மருதையனர் அவர்கள் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். பணம் கொடுத்தவர்கள் பெயர்கள் செப்புத் தகட்டில் பொறிக்கப்பெற்று பாடசாலை மகப்பில் தொங்க விடப்பெறுமெனவும், ஒரு வருடத்துக்கிடையில் சொந்த நிலத்தில் சொந்தக் கட்டடத்தில் அடுத்த திறப்புவிழாவை கனம் கல்வி மந்திரியாரைக் கொண்டே செய்விப்பதாகவும் குறிப்புக் கூறினர். ஒன்றும் நடைபெறவில்லை,

விரைவில மத்திய பாடசாலையைப் பெரும்பாலாருக்குச் சம்மதமான இடத்தில் நிறுவுதற்கு அரசினர் முயற்சி செய்வார்களாக,

இங்ஙனம்

**மு. குமாரசாமி**

1 20, ஆஸ்பத்திரி றோட்டு
பெரியகடை, யாழ்ப்பாணம்.

---


### விளம்பரம்

வடமாகாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி அராலி தெற்கில் ஓர் கொங்கிறீற் அணைகட்டுவதற்கு வடமாகாண எசண்டரவர்கள் 1948 ம் ஆண்டு பெப்ரவரி — மாசி மாதம் 17 ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணி வரைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளுவார்கள். குறித்த விண்ணப்பப் பத்திரங்களை ரூபாய் 25 கச்சேரியிற்கட்டி வடமாகாண எசண்டர் கையொப்பமிட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொரு பத்திரமாக 1948 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ந் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்குள் பெற்றுக்கொள்ளவேண்டும் மறு விபரங்களை வடமாகாண எசண்டரிடம் பெறுக்கொள்ளலாம்.

G 154 30

---

### விளம்பரம்

வடமாகாணம் கிளிநொச்சியி லுள்ள அரசாங்க கமத்திலிருக்கும் பண்டசாலையில் ஏறக்குறைய 8000 புசல் நெல்லைச் சுண்ணம்பு ஒப்பந்தமெடுத்தவுடன் துப்பரவாக்கி ஒப்படைக்க கொழும்பு கமத்தொழில் மந்திரசபையின் ரெண்டர்சபைத் தலைவர் 1948 ம் ஆண்டுபெப்ரவரி - மாசி மாதம் 7 ந் திகதிசெவ்வாய்க்கிழமைபகல்12மணி வரைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார், மறுவிபரங்களுக்கு 23—1—48 ன் அரசாங்க கஜற் பத்திரிகையைப் பார்க்கவும்,

பி. ஜே. கட்சன்
வடமாகாண கவண்மேந்து ஏஜண்டர்
யாழ்ப்பாணம்
20—1—48

G 151 30, 3


M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தரோக சஞ்சீவி கந்தசாமி வைத்தியர் சந்தனாதித் தயிலம்

**ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2**

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், மூரசுவளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்

வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30-6.48 (வெ)

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48

## வடமாராட்சி
## சைவமங்கையர் வித்தியாலய நிதி

வடமாராட்சிச் சைவப் பெண்பிள்ளைகளுக்கு (ஆங்கில) உயர்தரக் கல்வி தரத்தக்க ஒரு சைவ வித்தியாசாலை இல்லாமை ஒரு பெருங் குறைபாக இருந்ததை நீக்குவதற்காக இவ்வித்தியாசாலை ஸ்தாபிக்கப்பட்டு இப்பொழுது 3 வருடங்களே ஆகின்றன. இச்சிறு காலத்திற்குள் இந்த வித்தியாசாலை நல்ல முன்னேற்ற மடைந்திருக்கிறது இப்போது 400 பிள்ளைகள் வரையில் இங்கு கல்வி பயிலுகின்றனர். S. S. C., மற்றிக்குலேஷன் வரையில் வகுப்புக்கள் உண்டு. இன்று, இங்கு கல்விகற்க விரும்பும் மாணவிகள் எல்லோரையும் சேர்க்க இடமில்லாதது வருந்தத்தக்கது. அன்றியும் போதிய கட்டிட வசதியும் தளபாடங்களும் விடுதி வசதியும் இல்லாமையால் இங்கு பயிலப்படும் பல பொருள்களையும் சீரிய முறையிற் கற்பிப்பதற்கு முடியவில்லை.

இப்போது அத்தியாவசியமாய் இருப்பவை: ஒரு விஞ்ஞானப் பயிற்சிச் சாலையும் தளபாடங்களும், இன்னும் 10 வகுப்புகளுக்குக் கட்டிடமும், நூல் நிலையமும் வாசிகசாலையும், குறைந்தது 150 மாணவிகள் தங்குதற்கேற்ற விடுதியும்.

இவற்றை அமைப்பதற்கு குறைந்தது ரூபா 90,000 தேவை. ஆகையால் இப்பாடசாலையின் முன்னேற்றத்தைக் கருதும் எல்லோரையும் இந்த நிதிக்கு மனமுவந்து பொருளுதவி செய்து இந்த நற்காரியத்தை நிறைவேற்றுவிக்குமாறு வேண்டுகின்றோம்.

இலங்கையிலுள்ளோர் பருத்தித்துறை திரு. ச. சோ. சரவணமுத்து அவர்களுக்கும், மலாயா தேசத்திலுள்ளோர் திரு A. தம்பையா, மலாயன் யூனியன் செக்றற்றரியாற் என்ற விலாசத்துக்கும் தங்கள் தங்கள் உபகாரிப்பை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

ச. சோ. சரவணமுத்து, தனாதிகாரி — மு. ஆ. தங்கராசா, காரியதரிசி.

M 23, 30

## நாவலர் பதிப்பு நூல்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல ரவர்கள் பதிப்புப் புத்தகங்களை, வட இலங்கை முழுவதற்கும் வருவித்து விற்கும் உரிமை யாழ்பாணம் சைவ பரிபாலனசபை மனேஜருக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கின்றது; புத்தகங்கள் விரைவில் வந்துசேரும், வந்து சேர்ந்தவுடன் இப் பத்திரிகை வாயிலாகத் தெரிவிக்கப்படும்.

வண்ணார்பண்ணை 16—1—48

மனேஜா
யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை

## நாதன்ஸ் பிரசுரம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய
பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் - சென்னை - பினங் | ரூபா | 170 |
| ,, நாகபட்டணம் | | 115 |

யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு
அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம்
கப்பலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

**எஸ். ஆர். எஸ். நாதன்**

21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்
எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம், சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு

Std 22. 6-6-47—6-6-48

## இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலஙகை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸற் கம்பனி.

**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிளேஸ வங்கி.

**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை

**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு

(Std 29 1.8—30.7.48)

## இலக்கிய வாசகம்.

**மூன்றும் புத்தகம்**

**நான்காந்தரத்துப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது**
(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

**இதன் வசனபாகம்**
சத்தியவிரதம்பூண்ட அரிச்சந்திரமகாராசனுடைய வரலாறு இலகுவான இனிய செந்தமிழ்வசனநடையில் 18பாடங்களாக வகுத்தெழுப்பட்டுளது

**செய்யுட் பாகம்**
பஞ்சதந்திரத்தில் காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதைச்செய்யுள் நீதிக் கவித் திரட்டு, சதகத் திரட்டு என்னு மிவைகள் அடங்கி யுள்ளன.

பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட் பாடவுரை என்னுமிவை நள் சேர்க்கப்பட்டுள்ளன.

**பிரதி ஒன்று விலை சதம் 60 (அ 10)**

**இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன**

**மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை**
**யாழ்ப்பாணம்**

## வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna, on Friday, January 30, 1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org